# ஒடுக்கத்துப் புதன்

புகழனைத்தும் வல்ல இறைவன் ஒருவனுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அவர்களது பரிசுத்த குடும்பத்தினர், ஸஹாபாக்கள், தாபிஊன்கள், நல்லடியார்கள் மற்றும் நம் அனைவர் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக. ஆமீன்.

சர்வ வல்லமை பொருந்திய நாயன் இவ்வுலகையும் அதில் உள்ள அனைத்து வஸ்துக்களையும் படைத்து பரிபாலித்துக்கொண்டிருக்கிறான். அவனது நாட்டமின்றி அனுவும் அசையாது என்பதே இஸ்லாத்தின் அடிப்படையான போதனையாகும். பகல் வெளிச்சத்துக்கு சூரிய உதயத்தையும் இராவிருளுக்கு சூரிய அஸ்த்தமனத்தையும் காரணமாக்கியது போல் உலகின் ஒவ்வொரு விடயங்களுக்கும் பல அறிவியல் சார்நத வெளிக்காரணங்களையும் நியாயங்களையும் இறைவன் ஏற்படுத்தியுள்ளான். அதேவேளை, வல்ல நாயன் புறக்காரணிகளை வெளிப்படுத்தாத விடயங்களும் இவ்வுலகில் அரங்கேரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அந்த வகையில், இஸ்லாத்திலே காலங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது. அல் குர்ஆனிலே இறைவன் காலத்தின் மீது சத்தியமிட்டு நிச்சயமாக மனிதன் நஷ்ட்டத்தில் இருக்கிறான்; எனக்குறிப்பிடுகிறான். மற்றுமொரு இடத்திலே

اِنَّ عِدَّةَ الشُّهُوْرِ عِنْدَ اللّٰهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِىْ كِتٰبِ اللّٰهِ يَوْمَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ مِنْهَاۤ اَرْبَعَةٌ حُرُمٌ

“வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்து இறைவனிடத்தில் அவனது ஏட்டிலே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாகும்: அவற்றில் நான்கு மாதங்கள் சிறப்பானதாகும்.” (அல் குர்ஆன் 9:36). இங்கு மாதங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்ட இறைவன் சிலமாதங்களை ஏனயவற்றவை விட சிறப்பாக்கியிருப்பது தெளிவாகின்றது. அதேபோன்று நபிகள் கோமான் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் “நாட்களிலே சிறந்த நாள் வெள்ளிக்கிழமை நாள்” என்றார்கள். (முஸ்லிம்). இவ்வாறு சில மாதங்களும் நாட்களும் மகத்தானவை என அறிவிக்கப்பட்டிருப்பது போன்று வேறு சில நாட்களைக் குறித்து அவை பீடை நாட்கள், கெட்ட நாட்கள் எனவும் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருகிகின்றது.

فَاَرْسَلْنَا عَلَيْهِمْ رِيْحًا صَرْصَرًا فِىْۤ اَيَّامٍ نَّحِسَاتٍ

“கெட்ட நாட்களில் அவர்கள் (ஆத் சமூகத்தினர்) மீது ஒரு கொடிய புயல் காற்றை அனுப்பினோம்.” (அல் குர்ஆன் 41:16).

வேறொரு வசனத்திலே இவ்வாறான கெட்ட நாள் தெடர்ந்து வரக்கூடியது எனக்குறிப்பிடுகிறான்.

اِنَّاۤ اَرْسَلْنَا عَلَيْهِمْ رِيْحًا صَرْصَرًا فِىْ يَوْمِ نَحْسٍ مُّسْتَمِرٍّ

“நிச்சயமாக நாம் அவர்கள் மீது, நிலையாக தொடர்ந்துவரக்கூடிய துர்பாக்கியமுடைய ஒரு நாளில் பேரிரைச்சலைக்கொண்ட காற்றை அனுப்பினோம்.” (அல்குர்ஆன் 54.19).

எனவே, ஆத் கூட்டத்தினர் அழிக்கப்பட்ட நாளை கெட்ட நாள் என பிரஸ்தாபிக்கும் இறைவன் அது தொடர்ந்து வரக்கூடியது எனக்குறிப்பிடுகிறான். தப்ஸீருடைய உலமாக்கள், இமாம்கள், ஆரிபீன்கள், நல்லடியார்கள் அது ஸபர் மாதத்திலே வரக்கூடிய இறுதிப் புதன்கிழமை எனக்குறிப்பிடுகிறார்கள். மாத்திரமன்றி அந்நாளில் அதிகமான பலாய் முஸீபத்துகள், மிடிமைகள் இறங்கிக்கொண்டிருப்பதாகவும் அதுவே நாட்களில் மிகவும் கடினமான நாள் எனவும் குறிப்பிடுகிறார்கள். (முஜர்ரபாதுத் தீஸி, பக்கம்: 74). ஆகயால்தான் முன்னோர்கள் ஸபர் மாதத்தின் இறுதிப் புதன்கிழமையை ‘ஒடுக்கத்துப்புதன்’ என அழைத்தனர்.

அந்த நாளிலே பின்வரும் அல் குர்ஆன் வசனங்களை ஓதுவதன் மூலமாகவும் அவற்றை ஒரு தட்டிலோ அல்லது வாழை இலையிலோ எழுதிக் குடிப்பதன் மூலமாகவும் அந்நாளில் இறங்கும் பலாய் முஸீபத்துக்களிலிருந்து பாதுகாப்புப்பெறலாம் என ஆரிபீன்களான பெரியார்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே பின்வரும் அல் குர்ஆன் வசனங்களை ஓதியும் எழுதிப் பருகியும் ஓடுக்கத்துப்புதனின் முஸீபத்துகளிலிருந்து பாதுகாப்புப்பெறுவோமாக.

سَلَامٌ قَوْلاً مِّنْ رَّبٍّ رَّحِيمْ

سَلَامٌ عَلى نُوْحٍ فِي الْعالَمِينْ

سَلَامٌ عَلى إِبْرَاهِيمْ

سَلَامٌ عَلى مُوْسى وَ هَارُونْ

سَلَامٌ عَلى اِلْيَاسِينْ

سَلَامٌ عَلَيْكُمْ طِبْتُمْ فَادْخُلُوْهَا خَالِدِينْ

سَلَامٌ هِيَ حَتّى مَطْلَعِ الْفَجْرِ

இவ்வண்ணம்

خَادِمُ الغَوْثِيَّةْ
காதிமுல் கௌஸிய்யாஹ்